# பேலியகொட நகர சபை

## கம்பஹா மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 ஏப்ரல் 08 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிச் கூற்றுக்கள் 2010 பெப்ரவரி 24 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய பேலியகொட நகர சபை 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு உரிய கணக்குப் புத்தகங்களைப் பராமரித்து வந்திருந்திருந்தது என்றும், இவ்வறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் காட்டப்பட்டவாறான விடயங்களால் நிதிசார் கூற்றுக்களின் மீது ஏற்பட்ட தாக்கங்களைத் தவிர 2010 திசெம்பர் 31 இல் உள்ளபடி பேலியகொட நகர சபையின் நிலைவரம் மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளிலிருந்தான நிதிசார் விளைவு என்பவற்றை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாக நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) பின்னைய வருடங்களுக்காக கிடைத்திருந்த ரூபா 928,421 ஆன வீத வரி முற்பணமாகக் கிடைத்த வீதவரியாக கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிராததுடன் அதற்காக கொடுக்கப்பட்டிருந்த ரூபா 103,158 ஆன கொடுத்த கழிவு முற்பணமாகக் கிடைத்த ஆதனவரிக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட வேண்டியிருந்தும் மீளாய்வாண்டின் ஆதனவரிக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய வருடத்தில் கடன்கொடுத்தோரின் கீழ் காட்டப்பட்டு மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டு மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்த ரூபா 238,487 செலுத்த வேண்டிய தையற்கூலி கொடுப்பனவு, கடன்கொடுத்தோர் கணக்கில் தீர்க்கப்படாது வருடத்தின் செலவினமாகக் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(இ) முன்னைய வருடத்தில் மீளாய்வாண்டிற்காகக் கிடைத்திருந்த ரூபா 15,417 தொகையான அனுமதிப்பத்திரக் கட்டணம் வருமானத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதியில் சில்லறைக்காசுக் கட்டுநிதி தீர்க்கப்பட்டிருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 1,489 ஆன செலவு மீதியொன்று காட்டப்பட்டிருந்தது.

(உ) செலுத்தப்பட்டிருந்த சம்பள முற்பணம் ரூபா 33,200 சம்பளங்களிலிருந்து கழிக்கப்பட்டடிருந்த போதிலும் முற்பணக் கணக்கில் முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டின் போது பின்னைய வருடங்களுக்காக கிடைத்திருந்த ரூபா 186,000 தொகையான சனசமூக நிலைய வருமானம் நாட்குறிப்பு இல. 23 இன் மூலம் சீராக்கப்பட்டிருந்த போதிலும் அதன் வரவுப் பதிவு வாடகை வருமானக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) வங்கி உறுதிப்படுத்தல்களின் பிரகாரம் வட்டியினையும் உள்ளடக்கிய 2010 ஏப்ரல் 28 ஆந் திகதி வரை நிலையான வைப்பு மீதிகளின் பெறுமதி ரூபா 1,260,663 ஆக இருந்ததுடன் கிடைக்கப் பெறாத வட்டியாக ரூபா 118,214 தொகையும் சீராக்கப்பட்டு அம்மீதி ரூபா 1,378,877 ஆக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் சரியாகப் பெறவேண்டிய வட்டி ரூபா 85,505 தொகையாக இருந்ததுடன் அது பெறவேண்டிய வட்டியாக கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) இரண்டு சேமிப்புக் கணக்குகளின் மீதிகள் நாளதுவரையாக்கப்படாது மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 30,569 மாற்றமடையாத மீதியொன்றாக கணக்குகளில் வைக்கப்பட்டிருந்தது.

(ஐ) பெறுமதி சேர் வரித்தொகை செலுத்துகின்ற போது பெறுமதி சேர்க்கப்பட்ட வரித் தொகையில் விலக்களிக்கப்பட்ட வரித் தொகை கழிக்கப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு வரித்தொகை அனுப்பப்பட்டிருந்ததுடன்,

விலக்களிக்கப்பட்ட வரித்தொகையான ரூபா 62,314 செலவினமாகக் கணக்குகளில் வைக்கப்பட்டிருந்தமையினால் அத்தொகை வருமானமாகக் கணக்கில் சீராக்கப்படாமல் பெறுமதி சேர் வரிக் கணக்கில் பிடித்து வைக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

(i) 02 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 16,090,712 ஆக இருந்ததுடன் துணை பதிவேடுகளின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 14,519,068 ஆக இருந்தது.

(ii) கடன்கொடுத்தோர், வைப்புக்கள், முற்பணம் மற்றும் வேறு வருமானங்களின் ஏடுகள் சமப்படுத்தப்பட்டிருக்காமையினால் அக் கணக்குகளில் காணப்பட்ட மீதிகளை இணக்கம் செய்ய முடியவில்லை.

### 1.3.3 செலுத்த வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்த வேண்டியிருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 53,560,746 ஆக இருந்ததுடன், 01 வருட காலத்துக்கும் மேலாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,779,959 ஆக இருந்தது.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

(i) பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

2011 மார்ச் 31 ஆந் திகதி வரையும் 2010 ஆம் ஆண்டிற்குரிய கணக்காய்வு ஐயவினாக்கள் 05 இற்கு பதில் அளிக்கப்படாதிருந்ததுடன் இந்த ஐயவினாக்களில் உள்ளடங்கியிருந்த கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி அண்ணளவாக ரூபா 2,968,512 ஆகக் காணப்பட்டது.

(ii) கணக்காய்விற்கு தகவல்களைச் சமர்ப்பிக்காமை

தேவையான தகவல்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்காமை காரணமாக கூட்டுத்தொகை ரூபா 104,399,510 ஆன கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்திற்கும் மேலான வருமானம் ரூபா 18,967,376 ஆக இருந்ததுடன் இதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்திற்கும் மேலான வருமானம் ரூபா 6,186,029 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்படப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பவை பற்றிய தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | வருமான விடயம் | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப் பட்ட | உள்ளபடி யான | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை | மதிப்பி டப்பட்ட | உள்ளப டியான | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
| | | ரூபா “000 | ரூபா “000 | ரூபா “000 | ரூபா “000 | ரூபா “000 | ரூபா “000 |
| (i) | இறையும் வரியும் | 38,500 | 27,536 | 22,340 | 38,500 | 28,397 | 26,629 |
| (ii) | வாடகை | 2,288 | 1,996 | 813 | 2,361 | 1,753 | - |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 2,013 | 1,036 | 1,434 | 2,212 | 1,140 | - |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 17,367 | 21,289 | - | 17,817 | 13,047 | - |

#### 2.2.2 நிலுவை வருமானத்தை அறவீடு செய்தல்

(i) மீளாய்வாண்டின் இறுதியில் அறவிட வேண்டிய ஆதனவரி ரூபா 22,339,830 வும் வாடகை ரூபா 813,492 வும் மற்றும் அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 1,434,344 வினையும் அறவிடுவது சம்பந்தமாக நகரசபை கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அதிகாரம்) 170 (அ)(2) ஆம் பரிவின் அறிவுறுத்தலின் பிரகாரம் சபையின் செயலாளரினால் ஆக்க பூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

மேலும் 05 வருடங்களுக்கும் மேலாக கிடைக்கவேண்டியிருந்த ஆதனவரி வருமானம் ரூபா 5,960,614 ஆக இருந்தது.

(ii) 170(2) ஆம் பிரிவின் பிரகாரம் நிலுவை ஆதனவரியை அறவீடு செய்வதற்காக சொத்துக்களைத் தடை செய்யும் நடைமுறைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

## 2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமாக சபையின் பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவுகள் தொடர்புடைய முரண்களுடன் கீழே தரப்படுகின்றன.

| செலவின வகை | 2010 பாதீடு செய்யப்பட்டவை | 2010 உள்ள படியானவை | 2010 முரண் | 2009 பாதீடு செய்யப்பட்டவை | 2009 உள்ள படியானவை | 2009 முரண் |
|---|---|---|---|---|---|---|
| **மீண்டெழும் செலவினம்** | ரூபா "000 | ரூபா "000 | ரூபா "000 | ரூபா "000 | ரூபா "000 | ரூபா "000 |
| ஆளணிக்கான வேதனம் | 39,950 | 36,723 | 3,227 | 35,082 | 34,926 | 156 |
| ஏனையவைகள் | 46,332 | 26,014 | 20,318 | 46,579 | 29,593 | 16,986 |
| உப மொத்தம் | 86,282 | 62,737 | 23,545 | 81,661 | 64,519 | 17,142 |
| மூலதனச் செலவு | 50,402 | 18,346 | 32,056 | 45,101 | 7,699 | 37,402 |
| முழு மொத்தம் | 136,684 | 81,083 | 55,601 | 126,762 | 72,218 | 54,544 |

## 2.4 நிதிக் கட்டுப்பாடுகள்

(அ) 20 வருடங்களுக்கு மேலான காலத்திலிருந்து கொண்டுவரப்படுகின்ற மாற்றப்படாத ரூபா 46,050 வைப்புக்கள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 1,067,968 கூட்டுத்தொகையான 08 மதிப்பிழந்த காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 189 இன் அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.5 மிகைக்கட்டண அறவீடு

நகரசபைக் கட்டளைச் சட்டத்தின் (255 ஆவது அதிகாரம்) 182(1) ஆம் பிரிவின் அறிவுறுத்தல்களின் கீழ் உரிய பொறுப்பான அலுவலர்களுக்கு எதிராக என்னால் விதிக்கப்பட்ட மிகைக்கட்டணங்களுக்கு அமைய 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிடவேண்டியிருந்த மிகைக் கட்டணங்களின் பெறுமதி ரூபா 138,009 ஆகும்.

## 2.6 மனித வள முகாமைத்துவம்

### 2.6.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியினர் எண்ணிக்கை

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியினர் எண்ணிக்கையும் உள்ளபடியான பதவியினர் எண்ணிக்கையும் பற்றிய தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| பதவி வகை | அங்கீகரிக்கப்பட்டவை | உள்ளபடியானவை |
|---|---|---|
| நிறைவேற்றுனர் | 02 | 01 |
| இரண்டாம் தரம் | 38 | 31 |
| ஆரம்ப தரம் | 92 | 100 |
| ஏனையவர்கள் (சமயா சமயம்/ தற்காலிகம்) | - | 04 |
| செயற்திட்ட ஊழியர்கள் | 16 | 16 |

## 2.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 2.7.1 பெற வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 1,397,248 ஆக இருந்ததுடன், 01 வருத்துக்கும் மேலாக காணப்பட்ட கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 708,138 ஆக இருந்தது.

### 2.7.2 அறவிடப்பட வேண்டியுள்ள பதவியினர் கடன்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டியிருந்த பதவியினர் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 14,656,368 ஆக இருந்ததுடன் நீண்ட காலமாக அறவிடப்படாது காணப்பட்ட ரூபா 308,675 தொகையான பதவியினர் கடன் மீதிகளும் அதனுள் இருந்தது.

### 2.7.3 அசைவற்ற நடைமுறைச் சொத்துக்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 02 வருட காலத்துக்கும் மேலாக அசைவுறாது காணப்பட்ட வங்கிக் கணக்கொன்றின் வரவு மீதியின் பெறுமதி ரூபா 11,921 ஆக இருந்தது.

## 2.8 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

விஜய குமாரணதுங்க பாலர்பாடசாலை நடாத்தப்பட்டிருந்த கட்டிடத்தில் சுவர்கள் வெடித்து (ஆபத்தான நிலையில்) சிதைவடைந்திருந்தமையினால் 2007 மே மாதம் தொடக்கம் பாலர் பாடசாலை சபைக் காரியாலயத்தின் பின்பக்கத்தில் வாகனம் நிறுத்தப்படும் இடத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் இவ் உடைந்த சுவர்களின் கட்டிடங்களை பாதுகாப்பதற்கு எவ்வித பெறுமதியான சொத்துக்களும் காணப்படாதிருந்தும் பகல் இரவு பாதுகாப்பாளர் இருவரை ஈடுபடுத்தி சம்பளம் மற்றும் மேலதிக நேரக் கொடுப்பனவுகளாக 2007 மே முதல் 2010 நவம்பர் மாதம் வரை ரூபா 2,006,620 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

“மீள உபயோகிக்கக்கூடிய அஸ்பெஸ்டஸ் தகரங்களை வைப்பதற்கு இடமொன்று இல்லாதிருந்தமையினால் அதன் பாதுகாப்பதற்காக இவ்வாறு இரண்டு பாதுகாப்பாளர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்ததாக” 2011 ஆகஸ்ட் 24 ஆந் திகதி தலைவரினால் எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் தற்போது ரூபா இருபது இலட்சத்தையும் விஞ்சிய செலவினம் ஏற்பட்டிருந்ததுடன் பெறப்படுகின்ற பிரதிபலனை விஞ்சி செலவினங்களை ஏன் மேற்கொள்ள வேண்டியிருந்ததன்” அடிப்படையை கணக்காய்வில் புறந்தள்ள முடியாதிருந்தது.

## 2.9 ஒப்பந்தக் கட்டுப்பாடு

### பியகம வீதி தொட்டுபல வீதி கொங்ரீட் இடுதல்

வேலைகளின் 2010 மார்ச் 30 ஆந் திகதிய இறுதிக் கொடுப்பனவு அறிக்கையின் இல. 03 இன் பிரகாரம் வீதி முழுவதும் கொங்ரீட் இடுவதற்காக 01 கியூப் இற்கு ரூபா 31,750 படி 12.8 கியூப்களுக்கு ரூபா 406,400 செலுத்தப்பட்டிருந்த போதிலும் சபையின் வேலை அத்தியட்சகரினால் 2010 நவம்பர் 23 ஆந் திகதி

மேற்கொள்ளப்பட்ட பகுதிரீதியான பரீட்சிப்புக்களில் பெறப்பட்ட அளவிடைகளின் பிரகாரம் கொங்ரீட் இடப்பட்டிருந்த மொத்த சதுர அளவு 11.58 கியூப்களாகும். இதன் பிரகாரம் 1.22 கியூபிற்கு ரூபா 31,750 படி ரூபா 38,735 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 2.10 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

2010 ஆம் ஆண்டிற்காக வியாபார வரி விதிப்பு தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் 2010 மே 21 ஆந் திகதியே பிரசுரிக்கப்பட்டிருந்தது.

## 2.11 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தில் போதிய அளவில் உள்ளகக் கணக்காய்வு இடம் பெற்றிருக்க வில்லை.

## 3. முறைமைகளும், கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) உள்ளகக் கணக்காய்வு

(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(ஈ) வருமான நிருவாகம்

(உ) சொத்துக்கள் முகாமைத்துவம்